<u>4வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை- 600 104.</u>

நாள். 09.04.2026

எம்.சி.ஓ.பி எண். 3683/2021

ம.சா.3

பெயர்.கிருஷ்ணன்

த/பெ.திரு. சாரங்கன்

வயது.65

**<u>1வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் இறந்த நபருக்கு நான் உறவினர் இல்லை. விபத்து 09.10.2019 அன்று மாலை 6.30 மணியளவில் நடந்தது. விபத்து நடந்தபோது அங்கு இருந்தீர்களா என்றால் நான் அப்போது தான் வந்தேன். விபத்து நடக்கும்போது இருந்தேன். சம்பவ இடத்திற்கு காவல்நிலையத்திலிருந்து வந்தார்களா என்றால் வந்தார்கள் என்னிடம் விசாரணை எதுவும் செய்யவில்லை நானும் அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை. நான் தான் விபத்தை நேரில் பார்த்த கண்ணுற்ற சாட்சி போலிஸிடம் சொன்னீர்களா என்றால் சொன்னே் என்னுடை அலைபேசி என்னை பெற்றுகொண்டார்கள். விபத்து சமயத்தில் நான் கூடுவஞ்சேரிலியிருந்து தம்பரம் நோக்கி சென்றேன். விபத்தில் இறந்த நபர் எனது முன்னால் சென்று கொண்டிருந்தார். நான் பின்னால் இருந்து விபத்தை பார்த்தேன். தம்பரம் டூ செங்கல்பட்டு சாலையில் வந்த வாகனம் தான் விபத்தை ஏற்படுத்தியது அது எனக்கு எதிர் திசையிலிருந்து வந்தது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தி பதிவு எண் நான் பார்கக்வில்ல பின்னிட்டு கேட்டு தெரிந்துகொண்டேன். விபத்து சமயத்தில் வாகனம் எதுவும் இறந்தவர் மீது மோதவில்லை. லாரி வேகமாக வந்து சடன் பிரேக் போட்டதனால் லாரியின் சக்கரம் இறந்தவர் தலையின் மீது விழுந்தது. எனக்கும் இறந்த நபருக்கும் இடையே 50மீட்டர் இடைவெளி இருந்திருக்கும். லாரியின் சக்கரம் வெடித்து துாக்கி எறியப்பட்டதாக நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. அடிப்பட்ட நபரை மருத்துவமனைக்கு அழைத்துசெல்லவில்லை. 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைக்கப்பட்டார். சத்திய பிரமாண முதன்மை சாட்சயித்தை எப்போது தாக்கல் செய்தீர்கள் என்றால் போனமாதம் தேதி நியாபகமில்லை. 2019 ல் ஏற்பட்ட விபத்தை குறித்து முதல் முறையாக 04.02.2026 அன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்வில்லை என்றும் மனுதாரருக்கு இழப்பீடு பெற்றதர வேண்டி பார்க்காத விபத்தை பார்த்ததாக 7 வருடம் கழித்து நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சக்கரம் வெடித்து துாக்கி ஏறியப்பட்டது என்றும் விபத்தை நான் நேரில் பார்த்தாக சாட்சியம் அளிப்பதும் உண்மைக்கு புறம்பான விசயம் என்றும் பார்க்காத விபத்தை பார்த்தது போல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. புகார் கொடுத்தாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுவிசாரணை இல்லை.

X

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

ARUNDHADHI MAGESH

Digitally signed by ARUNDHADHI MAGESH